அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 01/2003

எனது இல: தா/1-1/3/7/2
அரசாங்க நிருவாக,முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
2003.01.03

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்

ஓய்வுபெற்ற அரச அலுவலர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தல்.

ஓய்வுபெற்ற அரச அலுவலர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் போது பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையதாக வேண்டுமென அரசு முடிவு செய்துள்ளது.

(I) அரச சேவையிலிந்து ஓய்வுபெற்ற அலுவலரொருவர் சேவை இடையறுந்து அல்லது இடையறாது முன்னர் வகித்த பதவியிலேயே மீண்டும் சேவையில் ஈடுபடுமிடத்து, அவர் அரச சேவையில் இறுதியாக பெறப்பட்ட சம்பளத்தை செலுத்துதல்.

(II) அவர் ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் உரித்தாகவிருந்த சம்பள அளவுத் திட்டத்தைப் பார்க்க உயர்ந்த சம்பள அளவுத் திட்டத்தை உடைய மற்றுமொரு பதவியில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படுமிடத்து, இறுதியாக பெறப்பட்ட சம்பளம் அல்லது அவர் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படும் பதவியின் தொடக்கச் சம்பளம் ஆகிய இரண்டில் கூடிய சம்பளத்தை செலுத்துதல்.

(III) ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் உரித்தாகவிருந்த சம்பள அளவுத் திட்டத்தைப் பார்க்க குறைந்த சம்பள அளவுத் திட்டத்தை உடைய மற்றுமொரு பதவியில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படுமிடத்து அவர் இறுதியாக பெற்ற சம்பளம் அல்லது புதிய பதவியுடன் இணைந்த சம்பள அளவுத் திட்டத்தின் நேரொத்தான சம்பளப் படிநிலை ஆகிய இரண்டில் குறைந்த சம்பளத்தை செலுத்துதல். (நேரொத்த சம்பளப் படிநிலை எனக் கருதப்படுவது ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் வகித்த பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டத்தில் உழைத்துப் பெற்றிருந்த வேதனவேற்ற எண்ணிக்கைக்கு நேரொத்ததான மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பதவிக்கு ஏற்புடைய சம்பள அளவுத் திட்டதின் வேதனவேற்ற எண்ணிக்கையின் படியான சம்பளப் படிநிலையாகும்)

(IV) சம்பள அளவுத் திட்டம் நிர்ணயம் செய்யப்படாத பதவியொன்றில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படுமிடத்து, சொல்லப்பட்ட பதவிக்குரிய முக்கிய பணிகளையும் பொறுப்புகளையும் கருத்திற் கொண்டு கலந்தாலோசிக்கப்பட்ட/சம்மதித்த சம்பளத்தை செலுத்துதல் (இச் சம்பளம் பொதுத் திறைசேரியின் இணக்கத்துடன் தீர்மானிக்கப்படல் வேண்டும்)

(V) கட்டாய ஓய்வு பெறும் வயதை அடைய முன்னராக ஓய்வுபெற்று மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற நபர்களின் ஓய்வுச் சம்பளத்தை அவர்கள் கட்டாயமாக ஓய்வுபெற வேண்டிய வயதை அடையும் திகதி அல்லது மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் ஒப்பந்த முடிவுறும் திகதி ஆகிய இரு திகதிகளில் முன்னராக அமையும் திகதி வரை மட்டும் நிறுத்தி வைத்தல்.

(VI) ஓய்வுபெற் அரச அலுவலரொருவர் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படுவதை ஒரு தடவைக்கு ஒப்பந்த அடிப்படையின் பேரில் ஆகக் கூடிய பன்னிரெண்டு மாதங்களுக்கு (12) வரையறுத்தல்.

02. ஓய்வு பெற்ற அரச அலுவலரொருவரை அரச சேவையின் பதவியொன்றில் மீண்டும் சேவையில் டுபடுத்த வேண்டியது, அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் மட்டுமாகும்.

03. இச் சுற்றறிக்கையின் கருமங்களுக்காக “இறுதித் தடவையாக பெறப்பட்ட சம்பளம்” எனக் கருதப்படுவது அலுவலர் ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொண்டிருந்த சம்பளமாகும். இறுதி வேதனவேற்றத் திகதியில் இருந்து ஓய்வுபெறும் திகதி வரையிலான வேதனவேற்றத்தில் உழைத்துப் பெற்றுக் கொண்ட பங்கு அதில் உள்ளடங்காது.

04 அலுவலரொருவர் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொண்டிருந்த சம்பள அளவுத் திட்டம் மீளமைக்கப்பட்டிருப்பின் அவரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் போது திருத்தப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தின் நேரொத்த சம்பளப் படிநிலையே ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டும்.

05 ஓய்வுபெற்றுள்ளவரொருவர் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டால் அவர் வேதனவேற்ற உரித்து அற்றவராவார்.

06. 2002.09.07 ஆந் திகதிய 15/2000 இலக்க, 2001.10.16 ஆந் திகதிய 24/2001 இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளின் கீழ் இடைக்காலப் படிகளுக்கு உரித்துடைய பதவியொன்றில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஓய்வுபெற்ற அலுவலரொருவருக்கு ஓய்வூதியத்துடன் கிடைக்கின்ற இடைக்காலப் படியை கழித்து வித்தியாசத்தை மட்டும் செலுத்தலாம்.ஒப்பந்த அடிப்படையின் பேரில் சேவையில் ஈடுபடுத்தும் அலுவலர்களுக்காக, செலுத்தப்படுவது சகல கொடுப்பனவுகளும் உள்ளடக்கப்படும் சம்பளமாவதனால், செலுத்தப்படும் மாதாந்த உழைப்பூதியத்தினுள் இடைக்காலப் படியின் தொடர்புடைய பங்கும் அடங்குதல் வேண்டும்.

07. ஓய்வுபெற்ற பின்னர் தற்போதைக்கு அரச சேவையின் பல்வேறு பதவிகளில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து அலுவலர்கள் தொடர்பாக இவ்வேற்பாடுகள் இச்சுற்றறிக்கை நடைமுறைப்படும் திகதியில் இருந்து ஏற்புடையதாகும். 2001.07.10 ஆந் திகதிய 17/2001 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின்படி ஓய்வூதியம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையை

கவனத்திற் கொண்டு ஓய்வூதியம் உள்ளடங்குமாறு உயர்ந்த சம்பளமொன்றை/ படியொன்றை அங்கீகரித்துக் கொண்டு தற்போது சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற அலுவலர்கள் சார்பில் செலுத்தப்படும் உழைப்பூதியமும் இதன்படி திருத்தப்பட வேண்டும்.

08. மேற்குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகள் 2002.11.20 ஆந் திகதி முதல் செயற்படுகின்றன.

ஒப்பம் : டிட்டா விமலசிறி
செயலாளர்,
அரசாங்க நிருவாக,முகாமைத்துவ,மறுசீரமைப்பு அமைச்சு